# விடியல்

The Dawn

இதழ்-116, டிசம்பர் -2018



**கௌரவ ஆசிரியர்**

**முனைவர் வே. இராதாகிருஷ்ணன்**

கல்லூரி முதல்வர்

**ஆசிரியர்**

**முனைவர் சி.ரா.சுரேஷ்**

தமிழ்த்துறைத்தலைவர்

**இணையாசிரியர்**

**முனைவர் ப.பிரதீபா**

தமிழ் உதவிப்பேராசிரியர்

**ஆசிரியர் குழு**

திருமதி. சு.சாந்தி
முனைவர் கோ.இரவிச்சந்திரன்
முனைவர் ந.சங்கீதா
திரு. செ.தங்கராஜ்
முனைவர் சு.முப்பிடாதி
திரு. ந.சரவணன்
திரு ஆ.கௌரிசங்கர்
திரு. சி.கிருஷ்ணமூர்த்தி
திரு. ரா.தர்மதுரை
செல்வி. மா.சத்தியப்பிரியா
திருமதி கொ.சத்தியா
திருமதி கா.வெண்ணிலா
முனைவர் ம.சுரேஷ்
திரு க.தனபால்
திருமதி ல.வெண்ணிலா
திரு.வீ.சந்திரன்


## மனித உரிமைகள் தினம்

தனி மனித உரிமைகள் நிலைப்படவும், பாதுகாக்கவும் தோன்றியது மனித உரிமைகள் ஆகும். இவ்வுரிமைகள் தனக்கு மட்டுமல்லாது தன்னைப் போலவே பிறருக்கும் பாதுகாப்பும், நிலைத்தன்மையும் உடையது. மனிதனுக்கு உரிமைகள் இயல்பானவை. இயற்கையிலேயே மனிதன் உரிமையோடு விளங்குகிறான் என்பது இயற்கை உரிமைக் கோட்பாடு ஆகும். தனிமனித உரிமை குறித்து பிரெஞ்சு தத்துவஞானி ரூஸோ “மனிதன் சுதந்திரமானவனாகப் பிறக்கிறான். ஆனால் எல்லா இடங்களிலும் அடிமைத் தளைகளில் கட்டுண்டு கிடக்கிறான் என்று கூறியிருப்பது ஈண்டு எண்ணத்தக்கது. உரிமை என்ற சொல்லோடு கடமை என்ற உணர்வு நெருங்கிய தொடர்புடையது.


© K.S. Rangasamy College of Arts and Science (Autonomous)



வெளியீடு:

**தமிழ்த்துறை**

**கே.எஸ்.ரங்கசாமி கலை அறிவியல் கல்லூரி(தன்னாட்சி)**
**திருச்செங்கோடு-637 215. தமிழ்நாடு, இந்தியா.**

**Fb:** facebook.com/ksrcasthamizh.vidiyal
**Blog:** ksrcasthamizh.blogspot.in **E-mail:** vidiyalmagazhine@gmail.com
**Website:** ksrcas.edu

KSR COLLEGE OF ARTS AND SCIENCE
INDIA
Knowledge is Power



All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system or transmitted in any form or by any means electronic, mechanical, photocopying, recording or otherwise without the prior written permission of the publis

இது பொறுப்பு, கட்டுப்பாடு, வரையறை, பாதுகாப்பு ஆகிய சொல்லாடல்களோடும் அதன் பொருண்மையோடும் இணைந்து செல்வது. உரிமைகளையும் கடமைகளையும் நிர்ணயிக்கும் சக்தியாக அரசு இயங்குகிறது. உரிமைகளைப் பாதுகாப்பதும், ஒருவர் பிறர் உரிமையில் குறுக்கிடாமல் இருக்க வழிசெய்வதும் அரசே ஆகும். இப்பணியில் அரசு மட்டுமே முழுமையாகச் செயல்பட இயலாது. ஒவ்வொரு மனிதனுக்கும் இப்பொறுப்பு உள்ளது. சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் தன் உரிமையை விட்டுக் கொடுக்காதிருப்பது போல, பிறர் உரிமையில் சொந்தம் கொண்டாடுவதும் நீதிக்குப் புறம்பானது எனலாம்.

ஐ.நா சபை 1945–ஆம் ஆண்டு தோற்றுவிக்கப்பட்டதெனினும் 1948, டிசம்பர் 10 -ஆம் நாளன்று உலகளாவிய மனித உரிமை பிரகடனத்தை வெளியிட்டது. இப்பிரகடனம் வெளியிடப்பட்ட நாளான டிசம்பர் 10 அன்று உலக மனித உரிமைகள் தினமாகக் கொண்டாட வேண்டுகோள் விடுத்ததுடன் 1948-ஆம் ஆண்டை மனித உரிமைகள் ஆண்டாக அறிவித்தது. அதுமுதல் வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒரு தனிமனிதன் மேல் சமூகமோ, பிற மனிதரோ, அரசோ அடக்குமுறைகளைக் கையாளும் போது மனித உரிமைகள் ஆணையம் தன்னிச்சையாகவோ, புகாரின் பேரிலோ நடவடிக்கைகளை எடுக்கும். அரசின் குறைகளைச் சுட்டிக்காட்டுவோரைப் போராட்டவாதிகளாகவும், பிரிவினை வாதிகளாகவும் சித்தரித்து அடக்குமுறைகளைக் கையாளும் நிலையில் அவர்கள் கைதின் பேரில் வன்கொடுமைகளுக்கு ஆளாகும் போது அவர்களை விடுவிக்கும் ஆணையமாக மனித உரிமைகள் ஆணையம் விளங்குகிறது.

சட்டங்கள் குறித்தும், தன் உரிமைகள் குறித்தும் விழிப்புணர்வு இல்லாத மக்களிடத்தும் பாதுகாவலாக இவ்வாணையம் செயல்படுகிறது. இருப்பினும் பலருக்கு ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்த செய்திகளோ, விழிப்புணர்வோ கிடைப்பதில்லை என்பது வருந்தத்தக்கது. இந்நிலை மாற்றப்பட்டு அனைத்து மக்களுக்கும் மனித உரிமைகள் மற்றும் உரிமைகளைக் காக்கும் ஆணையம் குறித்து விழிப்புணர்வு சென்றடையச் செய்ய வேண்டியது நம் அனைவரின் கடமை.

எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திடல் வேண்டும் என்பது உரிமைகளுக்கும் பொருந்தும். அவ்வாறு கிடைக்க அனைவரும் ஒன்று சேர்ந்து பாடுபட உறுதியேற்று செயலாற்றுவோம். நலமான சமூகம் படைப்போம்... ஏற்றத்தாழ்வு இல்லா ஒற்றுமையான வாழ்வு வாழ்வோம்... மற்றவரையும் விழிப்புணர்வுடன் வாழ வைப்போம்...

- **இணையாசிரியர்**

## *மனித உரிமைகள் தினம்*


*கவிதைகள்..................... ...5 – 12*

*நாடகத்தின் சுவை...............12 – 13*

*ஆச்சரியத் தகவல்கள்............13 -14*

*பொது அறிவு வினா- விடை.....14 –19*

*இந்திய குடியரசு தலைவர்கள்...19 -20*

*கட்டுரைகள்........................20 - 24*

*கவிதைகள்........................24 -32*

# கவிதைகள்

## வருங்கால விவசாயி

எனது வியர்வை நாற்றத்தை
யாரும் விரும்பவில்லை
நான் உருவாக்கிக் கொடுப்பவை
குறைவு.......
அதனை பயன்படுத்துபவர்களோ
அதிகம்....
உழைக்கிறேன் அனைவருக்காக!!
எனக்காக யாரும்
இல்லை என்பதே வருத்தம்.....
என் மண்ணைக் காக்கிறேன்
கண்கள் போல...
அதனைக் கூறுபோட்டு விற்கின்றனர்
கண்டவர்கள்......
காப்பவன்
வறுமையை வரமாகக்
கொள்கிறான்....
விற்பவன்
வாழ்க்கையை இதமாக்கிக்
கொள்கிறான்....

விதைக்கிறேன் விதைகளை

முளைக்கவே தடுமாறுகின்றன...

கண்ணெடுத்துப் பார்க்க

யாருமில்லை....

கி.விஜய்குமார்

இளம்அறிவியல் இரண்டாமாண்டு உயிர்தொழில் நுட்பவியல்

## விவசாயி

தான் உழைத்த பணத்தை
வங்கியில் போடாமல்
உன் உணவுக்காக
மண்ணில் போடுகின்றான்
“விவசாயி”

ஒரு முறையாவது “மருத்துவர்”
தேவைப்படுவார்
ஒரு முறையாவது “பொறியாளர்”
தேவைப்படுவார்
ஒரு முறையாவது “வழக்கறிஞர்”
தேவைப்படுவார்
ஆனால் தினமும் மூன்று நேரத்திற்கும்
உங்களுக்குச் சோறு போட
விவசாயி தேவைப்படுகிறார்.

பூ.மோனிகா,

இரண்டாமாண்டு உயிர்தொழில்நுட்பவியல், ஆ பிரிவு

## விவசாய தின வாழ்த்துக்கள்

தங்கள் வியர்வை உப்பை உரமாக்கி
தண்ணீர் கிடைக்காத நிலையிலும்
கண்ணீரால் பயிர் வளர்த்து
தான் வாடிய போதிலும் உலகை
செழுமையாய் வாழ வைத்த எம்
தெய்வத்திற்கு இணையான விவசாயப்
பெருங்குடி மக்களுக்கு விவசாய
தின வாழ்த்துக்கள்!!!!

ச.கீர்த்தனா
இரண்டாமாண்டு உயிர்தொழில்நுட்பவியல் 'ஆ' பிரிவு

## விவசாயி

பல குபேரனும் சோற்றில் கை வைக்க
தன்னை வருத்திச் சேற்றில் கை வைத்து
பாடுபடுபவன்...
இணையில்லா விவசாயி
நெற்பயிரும்
தலை நிமிர்ந்து நிற்கும் வரை
எத்தனைப் போராட்டம் ...
எத்தனை உழைப்பு...
போன வருடம் மழை பொய்த்தது
வறுமையால் வாடி நின்றாலும்
தன்னம்பிக்கை தான் கொண்டு
வயலில் இறங்குவான் விவசாயி .....

வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம்
வாடினேன் எனும் பெரியோரின்
வாக்கிற்கிணங்கவும்
சிந்தாமல் சிதறாமல்
தான் பெற்ற பிள்ளை போல
பேணி வளர்ப்பான் விவசாயி...
முன்னொரு காலத்தில்
மாடு கட்டிப் போரடித்தால்
மாளாது செந்நெல் என்று
ஆனை கட்டிப் போரடித்த
அழகான தென் மதுரை
என்று பட்டம் பெற
தன் நெற்றி வியர்வை சிந்த பாடுபட்ட
பெருமைகள் பல நிறைந்தவன்
விவசாயி!!!

ர.குமரவேல்
இளம்அறிவியல் இரண்டமாண்டு உயிர்தொழில்நுட்பவியல் ஆ பிரிவு

## எய்ட்ஸ் கவிதை

உலகையே உலுக்கிய வார்த்தை
உள்ளங்களை உறுத்திய நோய்!
முறையிலா உறவால் வந்திடும்
குறையுள்ள குருதியால் பரவிடும்!
தடம்மாறிய பாதையால் வந்திடும்
தடுமாறிய மனத்தால் ஒட்டிடும்

உண்மை உருவத்தை மாற்றிடும்

உன்னத வாழ்வையே உருக்கிடும்
வாழையடி வாழையாய் வந்திடும்
வாரிசின் வாழ்வைக் குலைத்திடும்
எய்ட்ஸ் வந்தாரை ஒதுக்காதீர்
ஏளனமாய் ஏறிட்டுப் பார்க்காதீர்
வழிமுறையும் உண்டு நலமுற
விதியென்று மனம் கலங்காதீர் !
மனதை அலைபாய விடாதீர்
மனைவி மக்களை மறவாதீர் !
விளக்கிச் சொல்லிடுங்கள் இதனை
விவரம் அறிந்தோர் உலகுக்கு!

எஸ்.தினேஷ்
இளம் அறிவியல், இரண்டாமாண்டு உயிர்த்தொழில்நுட்பவியல்
'ஆ' பிரிவு

## கடற்படை

நீலநிறத் தாய்
நீராக இருந்தாலும்
நிறைமனதைக் கொண்டு சென்றாய் நீ
உப்புடன் உறவாடிக் கொண்டு
கப்பலுடன் போராடிக்கொண்டு
உயிருடன் விளையாடிக் கொண்டு
உன் வாழ்க்கை கடல் நீரோ!!
உப்பை மட்டுமே தருகிறது
உன் சோகத்தைக் கண்டு
கண்ணீர் விட்டதால் என்னமோ!
புயல் எனும் கடற்கொள்ளையனை

எதிர்க்கத் தூண்டில்
இறையாய் உள்ளாய்
உறவுகளை மறந்து
கடலில் சிறையாக உள்ளாய்!!
உறவை இணைக்க, உயிரைப் பிணைக்க
ஒவ்வொரு நாளும்
ஆபத்தை அணைத்துக் கொண்டு வாழ்கிறாய்
கயிறுடன் உயிரைச் சேர்த்து
ஒரு கரத்தைக் கொடுத்து
பல கரத்தைக் காப்பாற்றினாய்
உன்னைப் போற்றும் தினம் எத்தினமோ
இத்தினம் கடற்படை தினம்!!

ஜோ.ப.தீபிகா
இரண்டாம் ஆண்டு, உயிர்த்தொழில்நுட்பவியல் ‘ஆ’ பிரிவு

## என்றென்றும் ஆசை

காற்றிலே கரையும்
காற்றைப் போல ....
என் காதல்
உன் காதலில் கரையுமோ?

இனம் சேரா
இனத்தில் பிறந்தோம் - இருப்பினும்
இணைய காரணம் எதுவோ!
ஆசையோ அல்லது உன்மீது கொண்ட
பாசத்தின் பின்னலோ...

என் காதல்
உன் காதால் அறிந்தும்
உன்னையே ஈட்டி துளைத்தும்
அலை ஓய்ந்த கடல் போன்று
இருக்கின்றாய்... நிலம் போலவே...!
நீ நிலம் எனத் தெரிந்தும்
நான் உயரத்தில் இருந்து
நீர் வீழ்ச்சியாய் உன்மேல் குதிக்கின்றேன்
தாங்கிக் கொள்வாய் என்று.....

உன் இதழ் பட்டு
நான் ஆறாய்ச் சென்றாலும்
கடலைக் காணும் முன்
கரையாக நின்று செல்வேன்
உணர்வுகளை அறியா
மானிடர்கள் நம்மைப்
பிரித்தாலும் இரட்டைக் கிளவி
போலவே இணைய வேண்டும்
பிரித்தால் பயனற்றது என்று
அவர்கள் உணர வேண்டும்...
நம் காதல்
ஆங்கிலக் காதல் அல்ல...
அழியா ஓவியம்...

ரஞ்சித்குமார், மூன்றாமாண்டு, பல்மருத்துவத்துறை,
கே.எஸ்.ரங்கசாமி பல்மருத்துவக் கல்லூரி

## மாற்றுத் திறனாளிகள்

உடல் உறுப்புகள் மட்டுமே
உதிர்ந்து போய் உள்ளது உங்களிடம்
மனவுறுதி மட்டுமே குன்றாமல்
உள்ளது உங்களிடம்
ஊனம் என்பது உடம்பில் மட்டுமே !
சாதிப்பதற்கு ஊனம் ஒரு தடையில்லை
நீங்கள் மற்ற மனிதர்கள் போலில்லாமல்
சாதிக்கும் வெறியும் தன்னம்பிக்கையும்
அதிகம் கொண்டு இருப்பதாலோ என்னவோ
உங்களை மாற்றுத் திறனாளிகள்
என கூறுகிறார்கள்.....!
சாதிப்பதற்கு ஊனம் ஒரு தடையில்லை.

க.பிரேமிகா
இரண்டாம் ஆண்டு, உயிர்த்தொழில்நுட்பவியல்துறை 'ஆ' பிரிவு

## நாடகத்தின் ஒன்பது வகை சுவை

**வீரம்:** வீரம் என்பது மாற்றாரை(பகைவர்) குறித்து நிகழ்வது.

**அச்சம்**: அச்சம் என்பது அஞ்சத்தகுவன கண்டவழி நிகழ்வது.

**இழிப்பு**: இழிப்பு என்பது இழிக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது

**வியப்பு**: வியப்பு என்பது வியக்கத்தக்கன கண்டுழி நிகழ்வது வியப்பு எனினும் அற்புதம் எனினும் ஒக்கும்.

**காமம்:** காமம் என்பது இன்ப நிகழ்ச்சியான் நிகழ்வது. காமம் எனினும் சிருங்காரம் எனினும் ஒக்கும்.

**அவலம்:** அவலம் என்பது இழிவு பற்றிப் பிறப்பது. அவலம் எனினும் கருணை எனினும் ஒக்கும்.

**உருத்திரம்**: உருத்திரம் என்பது அவமதிப்பிற் பிறப்பது. உருத்திரம் எனினும் வெகுளி எனினும் ஒக்கும்.

**நகை:** நகை என்பது இகழ்ச்சி முதலாயினவற்றால் பிறப்பது.

**நடுநிலை**: என்பது யாதொன்றானும் விகாரப்படாமை நடுநிலை எனினும் மந்திரம் எனினும் சாந்தம் எனினும் ஒக்கும்.

ம.குணசேகர்

மூன்றாமாண்டு, இளங்கலைத்தமிழ்,

## *ஆச்சரியமான தகவல்கள்*

- அன்னாசிப் பழத்திற்கு விதைகள் இல்லை
- அரேபியாவில் ஆறுகள் இல்லை
- அண்டார்டிகாவில் மரங்கள் இல்லை
- இந்தியாவில் எரிமலைகள் இல்லை
- உத்திரப் பிரதேசத்தில் தென்னை மரங்கள் இல்லை
- யமுனை ஆறு கடலில் கலப்பதில்லை
- சிங்கப்பூரில் காக்கைகள் இல்லை
- பூடானில் திரை அரங்குகள் இல்லை
- பறவைகளுக்கு வியர்வை சுரப்பிகள் இல்லை
- யானையின் துதிக்கையில் எலும்புகள் இல்லை
- நட்சத்திர மீனுக்கு மூளை இல்லை
- வண்ணத்துப்பூச்சிக்கு வாய் இல்லை
- நண்டுக்கு தலை இல்லை

- ஆமைக்குப் பற்கள் இல்லை
- ஹவாய் தீவில் பாம்புகள் இல்லை

யமுனா.வ.,

முதலாம் ஆண்டு உயிர் தொழில்நுட்பவியல், ஆ பிரிவு

## பொது அறிவு

1. சங்க கால சோழர்களின் முதல் தலைநகரம் எது?

   விடை : உறையூர்

2. தமிழ்நாட்டில் கார் பந்தயத்திற்கான பாதை எங்கு போடப்பட்டுள்ளது?

   விடை : இருங்காட்டுக் கோட்டை

3. தென்னிந்தியாவில் பனாரஸ் என்று அழைக்கப்படுவது எது?

   விடை : காஞ்சிபுரம்

4. மதுரை மீனாட்சியம்மன் கோவிலைக் கட்டியவர் யார்?

   விடை : அரிகேசரி மாறவர்மன்

5. தமிழ் நாட்டில் முட்டையைப் பவுடராக்கும் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?

   விடை : ஈரோடு

6. மதுரையை ஆண்டு முதல் நாயக்க மன்னர் யார்?

   விடை : விசுவநாத நாயக்கர்

7. தமிழ்நாட்டில் எங்கு காடுகள் அதிகமாக உள்ளன?

   விடை : ஈரோடு

8. தமிழ் நாட்டில் எத்தனை நீர் மின்நிலையங்கள் உள்ளன?

   விடை : 27

9. வாரணம் ஆயிரம் சூழ வலம் வந்து என்ற பாடலைப் பாடியவர் யார்?

விடை : ஆண்டாள்

10. இரண்டாவது அதிகமான வலைத்தளங்களைக் கொண்ட இந்திய மொழி எது?

விடை :தமிழ்

மா.தினேஷ்,
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு.

## பொது அறிவு

1. இந்தியாவின் முதல் பெண் விமானி யார்?

விடை :துர்கா பானர்ஜி

2. இந்தியாவின் நாவல் அகாடமி அமைந்துள்ள இடம் எது?

விடை :கொச்சி

3. உலகிலேயே மிகப்பெரிய தீபகற்பம் எது?

விடை :அரேபியா

4. மனித மூளையின் எடை எவ்வளவு?

விடை :1.3 கிலோ கிராம்.

5. உடலில் இரத்தம் பாயாத பகுதி எது?

விடை :கருவிழி

6. ஒரே கூட்டில் 100-க்கும் அதிகமான முட்டைகளை இடும் பறவை எது?

விடை :ஆஸ்ட்ரிச்

7. பொன்தோல் போர்த்த பூமி என்றழைக்கப்படுவது எது?

விடை :ஆஸ்திரேலியா

8. ஸ்வீடனின் நாணயம் எது?

விடை :க்ரோனா

9. புவி நாள் எப்போது?

விடை :ஏப்ரல் 22

10. பறக்கும் போது உறங்கும் பறவை எது?

விடை :கழுகு

சி.ரா.கயல்விழி

முதலாம் ஆண்டு உயிர்த்தொழில்நுட்பவியல் ஆ பிரிவு

## பொது அறிவு

1. இந்தியாவில் எத்தனை வகையான மண் வகைகள் காணப்படுகின்றன?

விடை: 5 வகை

2. தாஜ்மகாலை வடிவமைத்தவர் யார்?

விடை : உஸ்தத் இஷா

3. விக்ரம் சீலா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர் யார்?

விடை: தர்மபாலர்

4. ஷெர்ஷாவின் கடைசி படையெடுப்பு எது?

விடை: பண்டேல் கண்ட்

5. முகலாயப் பேரரசில் சிறந்த கவிஞர் யார்?

விடை: பாபர்

6. இந்தியாவின் முதல் பீல்டு மார்ஷல் யார்?

விடை: மானக்ஷா

7. மும்மொழிக் கல்வியினை சிபாரிசு செய்தது யார்?

விடை : கோத்தாரி கமிட்டி

8. மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் முதன் முதலில் உபயோகப் படுத்தப்பட்ட வருடம் எது?

விடை: 1998

9. மாவட்ட நீதிபதிகளை நியமிப்பது யார்?

விடை: மாநிலங்களின் ஆளுநர்

10. சுதந்திர கட்சியை 1959-இல் நிறுவியவர் யார்?

விடை: சி.ராஜகோபாலாச்சாரி

இ.கோகுலக்கண்ணன்,
இளங்கலைத்தமிழ் மூன்றாமாண்டு.

## பொது அறிவு

1. தவம் செய்யும் பூனையின் சிலை எங்குள்ளது?

விடை: மாமல்லபுரம்

2. திருமுதுகுன்றம் என்றழைக்கப்படும் ஊர் எது?

விடை: விருத்தாசலம்

3. திருச்செந்தூர் முருகன் கோவில் விபூதியை எந்த இலையில் மடித்துத் தருவார்கள்?

விடை: பன்னீர் இலை

4. இலக்கியத்தில் சந்திரமதி என்பது யாருடைய மனைவியின் பெயர்?

விடை: அரிச்சந்திரன்

5. சிவபெருமான் பள்ளிகொண்ட நிலையில் காட்சி தரும் கோயில் எங்குள்ளது?

விடை: ஊத்துக்கோட்டை

6. முதன்முதலாக வெள்ளிவிழா கொண்டாடிய தமிழ் திரைப்படம் எது?

விடை: தட்சயக்ஞும்

7. புராண காலத்தில் தாமிர பரணிக்கு என்ன பெயர்?

விடை: செம்பு நதி

8. "கைதை" என்ற சொல் எந்த மலரைக் குறிக்கும்?

விடை: தாழம்பூ

9. 'ஒத்தைக்கல் மந்தை' என்று அழைக்கப்படும் கோடைவாசஸ்தலம் எது?

விடை: ஊட்டி

10. மகேந்திரவர்மன் மும்மூர்த்திகளுக்கு ஆலயம் கட்டிய இடம் எது?

விடை: மண்டபப்பட்டு

ந.திவ்யா,

இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு.

## பொது அறிவு

1.ஸ்புட்னிக் செயற்கைக் கோள் என்று பறக்கவிடப்பட்டது?

விடை: 14.10.1957

2.உடலில் குளிர்ச்சியான பகுதி எது?

விடை: மூக்கின் நுனி

3.இரைப்பையின் பணி என்ன?

விடை: புரதத்தைச் செரித்தல்

4.நமது உடலின் நீளமான எலும்பு எது?

விடை: தொடை எழும்பு

5.டென்மார்க் நாட்டின் தேசியப் பறவை எது?

விடை: வானம்பாடி

6.கோள்களில் பெரியது எது?

விடை: வியாழன்

7.சனிக்கோள் சூரியனைச் சுற்றிவர ஆகும் காலம் எவ்வளவு?

விடை: 28 ஆண்டுகள்

8.செவிக்குழலின் நீளம் என்ன?

விடை: 2.5 சென்டி மீட்டர்

9.நம் உணவுப் பாதையின் நீளம் எவ்வளவு?

விடை: 8 மீட்டர்

10.யானையின் விலங்கியல் பெயர் என்ன?

விடை: எலிபஸ் மாக்ஸிமஸ்

அ.சிவக்குமார்

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## ஆண் என்பவன் யார்?

வீட்டின் தேவைகளை அறிந்து, தேவைகளைப் பூர்த்தி செய்பவன்; ஒரு தந்தையாக குடும்பத்தை நிலைநிறுத்துபவன்; அண்ணனாக குடும்பத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்பவன்; தம்பியாக குடும்பத்தை அனுசரித்து செல்பவன்; தோழனாக பெண்களுக்குக் காவலனாக இருப்பவன்; குடும்பத்தின் தேவைகளுக்காகத் தன் தேவைகளைக் கவனிக்காதவன்; அனைத்து கஷ்டங்களையும் தன்னுள் அடக்கிக் கொள்பவன்; அடுத்தவர்களின் ஆனந்தத்திற்காகவே ஆயுள் முழுக்க அர்ப்பணிப்பவன்.

ரா.மோகனஜோதி,

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு.

## இந்திய குடியரசுத் தலைவர்கள்

1. டாக்டர் இராஜேந்திர பிரசாத் (1950 – 1962)
2. சர்வபள்ளி இராதாகிருஷ்ணன் (1962 – 1967)
3. ஜாகீர் உசேன் (1962 -1969)
4. வி.வி.கிரி (1969 -1974)
5. பக்ருதின் அலி அகமது (1974 – 1977)

6. நீலம் சஞ்சீவி ரெட்டி (1977-1982)
7. ஜெயில் சிங் (1982-1987)
8. ரா.வெங்கட்ராமன் (1987-1992)
9. சங்கர் தயாள் சர்மா (1992-1997)
10. கே.ஆர்.நாராயணன் (1997-2002)
11. ஏ.பி.ஜே.அப்துல்கலாம் (2002-2007)
12. பிரதீபா பாட்டீல்(2007-2012)
13. பிரணாப் முகர்ஜி (2012 -2017)
14. ராம்நாத் கோவிந்த் (2017 முதல்)

மு.வைரமணி,
இளங்கலைத் தமிழ், மூன்றாமாண்டு.

## தாஜ்மகால் வடிவம் பெற்ற வரலாறு

மும்தாஜ் இறந்த பின் ஷாஜகான் உடல்நிலை சரியில்லாமல் சிலமாதங்களாகப் படுக்கையில் இருந்தார். அவர் தன் மனைவியின் நினைவாக ஒரு கலைக்கட்டிடம் அமைக்க விரும்பினார். அதற்காக மாதிரி வடிவம் வரைய ஹரின் என்னும் ஓவியரிடம் கூறினார். பின் அவரும் ஒருமுறை.. இருமுறை, மூன்று முறை.. நான்கு முறை.. எனப் பல ஓவியங்களை வரைந்து காட்டினார். அரசருக்கோ அதில் ஏதும் பிடிக்கவில்லை. பின் அரசர் ஹரினின் வீட்டிற்குச் சென்று இது வரை வரைந்தது போதும். இனி உனக்கு ஒரு வாய்ப்புதான் அளிப்பேன். இல்லையெனில் உன்னைத் தீர்த்து கட்ட உத்தரவிடுவேன் என்றார்.

சந்தோஷமாக இருந்த புதுமண தம்பதியினர் திலோத்தியும் ஹரினும் சோகத்திற்குள்ளானார்கள். திலோத்தி கூற அரசனின்

நிலை உனக்கு புரிந்தால் மட்டுமே உன்னால் அவருக்குப் பிடித்த மாதிரி வடிவம் வரைய முடியும். பின் இரவு மெல்ல மெல்ல நகர்ந்தது. ஹரின் வழக்கம் போல் வேலையை முடித்து வீடு திரும்பினான். "திலோத்தி, திலோத்தி.. திலோத்தி.." என சந்தோஷமாக அழைத்தான். எந்தப் பதிலும் இல்லை. ஹரின் கோபத்துடன் "திலோத்தி" என அழைத்தபடி வீட்டில் நுழைந்தான். மேஜையில் ஒரு கடிதம். என் அன்பான ஹரினுக்கு … உனக்கோ அரசனின் நிலை புரிய வேண்டும். இல்லையெனில் அமைச்சர் உன்னை விடமாட்டார். எனவே நான் யமுனை நதிக்கு இரையாகப் போகிறேன். இப்படிக்கு திலோத்தி. இவனுக்கோ மிகவும் அதிர்ச்சி. யமுனை நதியை நோக்கி ஓடினான். சோகத்துடன் அனைத்து சடங்குகளையும் செய்து முடித்த பின் ஹரின் அமைதியாக உட்கார்ந்து தான் திலோத்தி உடன் வாழ்ந்த நிகழ்வினை எண்ணிப் பார்த்தான். ஒரு இரவில் கட்டிலில் அமர்ந்து கொண்டு அழகிய முழுநிலவினை ரசித்தபடி திலோத்தி தன் கையில் சுவைமிக்க மாம்பழத்தை அறுத்துக் கொண்டிருந்தாள். அப்போது அவளின் கையை வெட்டிக்கொண்டாள். துடித்துப் போன ஹரின் தன் வாயால் அவளின் கையில் வரும் இரத்தத்தை உறிஞ்சினான். அந்த நினைவுக்குப் பின் ஹரினுக்கு ஒரு வடிவம் தோன்றியது. முழுநிலவு, மாம்பழம், வெட்டுப்பட்ட விரல் தாமரை மலரின் இலையைப் போன்ற அவளின் விரல்கள் இவற்றை எண்ணியபடி தாஜ்மஹாலை அமைச்சரிடம் கொடுத்தான்.

அமைச்சர் அரசனிடம் அதனைக் காட்டினான். சில வருடங்களுக்குப் பிறகு அவர் முகத்தில் அன்று தான் புன்னகை தோன்றியது. "திலோத்தி ஏதோ ஹரினை செய்து இருக்கிறாள். இல்லையென்றால் இவ்வளவு அழகான ஓவியம் கிடைக்குமா?

எங்கே அவர்கள் இருவரையும் நான் காண விரும்புகிறேன்". என்றார் அரசர். "அரசே! திலோத்தி யமுனையில் வீழ்ந்து இறந்து விட்டாள். என்றார் அமைச்சர். ஹரினையாவது நான் பார்க்க வேண்டும் என்றார். திலோத்திக்கு இடம் கொடுத்த யமுனை ஹரினுக்கு மட்டும் இடம் கொடுக்க மறுக்குமா? அவனும் யமுனைக்கு இரையானான். இந்த செய்தியைக் கேட்ட அரசர் சந்தோஷப்படுவதா? வேதனைப்படுவதா? எனப் புரியாமல் துடித்தார்.

பின் ஹரின் மனதில் உருவான தோற்றத்தில் தாஜ்மஹால் உருவானது. 22 வருடத்தில் தாஜ்மஹால் கட்டப்பட்டது. முழு தாஜ்மஹாலைக் கட்ட சுமார் மூன்று கோடி ரூபாய் செலவானது.

இருவரின் உயிர் தியாகத்தின் மறுவடிவம் தான் உலக அதிசயத்தில் ஒன்றான தாஜ்மஹால்.

செ.தீபன்ராஜ்,
முதலாண்டு இளம் அறிவியல் வேதியியல்.

## தேசிய மாசுக்கட்டுப்பாட்டு தினம்

வருடந்தோறும் டிசம்பர் 2-ம் தேதி தேசிய மாசுக்கட்டுப்பாட்டு தினம் கொண்டாடப்படுகிறது.

**மாசுக்களை கட்டுப்படுத்துவதற்கான வழி முறைகள்**

- குப்பைத்தொட்டிகளை முறையான இடங்களில் வைத்தல் மற்றும் உபயோகித்தல்
- மழைநீர் மற்றும் வாகனங்கள் கழுவும் நீரை வீணாக்காமல் பயன்படுத்துதல்
- மக்காத பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்த்து மக்கும் பொருட்களை பயன்படுத்துதல்

- மரங்கள் நிறைய வளர்த்தல்
- குப்பைகளை எரிப்பதில் கவனம்
- வாகனங்களின் வழியாக பரவும் புகை காற்று மாசுபடுதலுக்கு முக்கிய காரணம்.

**மாசுபடுதல் வகைகள்**

1. நீர் மாசுபடுதல்
2. நிலம் மாசுபடுதல்
3. காற்று மாசுபடுதல்

**நீர் மாசுபடுதல்**

- முந்தைய காலங்களில் நம் முன்னோர்கள் ஆறு, கிணறு, ஊற்று, குளம் போன்றவற்றைப் பயன்படுத்தினர்.
- ஆதலால் நம் முன்னோர்கள் மிகவும் வலிமையாக இருந்தனர். ஆனால் தற்போது கிடைக்கின்ற நீரில் மிகவும் நம் உடல்நலத்திற்கு தீங்கானதாக இருக்கின்றது.
- நீர் மாசுபடுவதற்கு காரணங்கள் தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் மாசுக்கள், சாயக்கழிவுகள் முதலானவை.
- தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் சாயக்கழிவுகள் நேரடியாக நீர்நிலைகளில் சேர்வதால் நீரானது மிகவும் நமக்கு தீமையாக உள்ளது.
- சாக்கடைகளில் கொட்டப்படும் மருத்துவக் கழிவுகளும் நீர் மாசுபடுதலுக்குக் காரணமாகும்.

**நிலம் மாசுபடுதல்**

- நிலம் மாசுபடுவதற்கான முக்கிய காரணம் மக்காத குப்பைகளை நிலங்களில் போடுதல்

- அந்தக் குப்பைகளால் நிலமானது தன்னுடைய திட உறுதித்தன்மை குறைகிறது.
- மக்கும் குப்பைகளை பயன்படுத்தினால் நிலமானது அதனுடைய நிலையிலிருந்து மாறாமல் இருக்கும்.
- மருத்துவ மனைகளில் அறுவை சிகிச்சையில் எடுக்கப்படும் மனித உறுப்புக்களை முறையின்றி நிலங்களில் கொட்டுவதாலும் நிலம் மாசுபடுகிறது.

## காற்று மாசுபடுதல்

- காற்று மாசுபடுதலுக்கு முக்கியக் காரணம் வாகனப்புகை, குப்பைகளை முறையாக எரிக்காமை, மக்கும், மக்காத குப்பைகளை தனித்தனியாகப் பிரித்து குப்பைகளை எரிக்காமை.
- வாகனங்களில் இருந்து வரும் புகையானது மனிதர்களுக்கும் வளிமண்டலத்திற்கும் தீங்கினை விளைவிக்கும்.
- மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சையில் உபயோகப்படுத்தும் பொருட்களை முறையாக எரித்தல் வேண்டும்.

சு.ஹேமலதா,
இரண்டாம் ஆண்டு,
உயிர்த்தொழில்நுட்பவியல் ஆ பிரிவு

## என் அன்பு அம்மா

நான் பிறந்ததும்
என் அழகைப் பார்க்காமல்

என்னை ரசித்தவள்
என் அம்மா

நான் செய்யும் செய்கைகளைக்
கண்டு ரசித்தவள்
என் அம்மா

நான் எவ்வளவு கஷ்டம் தந்தாலும்
அழகாய்ச் சிரித்துக் கொண்டே
என்னைச் சமாளிக்கிறவள்
என் அம்மா

நான் தப்பு செய்தால் கூட
என்னை விட்டுக் கொடுக்காதவள்
வெறும் சம்பளத்தை மட்டும் பார்க்காமல்
என் சந்தோஷத்தைப் பார்ப்பவள்
என் அம்மா

நான் என்ன சொன்னாலும்
நான் அன்பாக இல்லையென்றாலும்
என்னை அன்பாகப் பார்த்துக்கொள்பவள்
என் அம்மா.

அ.பிரதீபா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## நட்புக் காலங்கள்

பள்ளி முடிந்த பின்னும்
வீடு திரும்பாமல்

நண்பர்களுடன்
மாலை ஆறுமணி வரை
வியர்க்க வியர்க்க
ஓடிப்பிடித்து
விளையாடிய போது
வியர்வையை விட
அதிகமானது நட்பு...

கல்லூரியில் சேர்ந்த பின்
வீடு திரும்ப தாமதமானதால்
நண்பன் வீட்டில்
நானும் ஒரு பிள்ளையாய்
தங்கிய போது
பாசத்தை விட
உயர்ந்திருந்தது நட்பு...

வேலை தேடி அலையும் போது
ஒன்றாய் நேர்முகத் தேர்வுக்கு
சென்று கிடைக்காத
வேலையைத் திட்டிக் கொண்டே
தோழர்களுடன் சினிமா சென்றபோது
சுமை தாங்கியானது நட்பு...

வேலை கிடைத்து ஒவ்வொருவரும்
வேறு வேறு ஊர்களுக்கு
சென்றுவிட்ட பின்
வாரம் ஒருமுறை அனுப்பும்

இருவரி ஈமெயிலிலும்
நண்பர்களுக்குள் கொடுக்கும்
தவறிய அழைப்புகளுமாக
மாறிப்போனது இன்றைய நட்பு...
நட்பின் நினைவுகளுடன்
காலங்கள் செல்கின்றன...

க.ரஞ்சூரியா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## நட்பு

நட்பு
ஆயிரம் முறை
அழைத்தாலும்
பிழை வருவதில்லை
ஆயிரம்
பேர் அசைத்தாலும்
இலை உதிர்வதில்லை
மரணம் எய்தினாலும்
மறு கணம்
பிறை கண்டிடும்
அழையா விருந்தாளியாய்
அடைப்பு குறிகள்
நிறை கொண்டிடும்
உன் தோழமை
எனக்கு

புரியாத விடை...

மீண்டும் பூத்த

மலருக்கு

நீ

செய்யாதே தடை...

கடைசி வரை

தோழமை

உண்மை அன்பின்

வலிமை

மீண்டும் விலக துடித்திடாதே

நீ பேசத் துடிக்கும் போது

ஒரு வேளை

என் இதயம்

நின்று போய்விடலாம்

சி.சூர்யா

இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## நட்புக் காலங்கள்

எங்கிருந்தோ

விதைகளாய்

பிறந்து வந்தோம்!

இன்று

ஒரு செடிப் பூக்களாக

பூத்துக் குலுங்குகிறோம்

முறக்க முடியாத

நட்புக் காலங்களை
சுமந்து கொண்டும்
சேகரித்துக் கொண்டும்
நடக்கிறோம்!

நட்பு அழைத்துச்
சென்ற பாதையில்
ஆனந்த பவனியும் சென்றோம்
நாம் வைத்த
செல்லப் பெயர்களும்
கிளம்பி நின்றது
இந்தக் கல்லூரி
நினைவுகளும் கனவுகளும்
இனிக்கிறது எந்நாளும்...

சின்னச் சின்ன சண்டைகளிலும்
இனிய புரிதல்களைக்
காணும் நட்புகள்
என்றும் தொடரும்.....

சி.வினிதா
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## பெண்ணின் உருக்கம்

ஒரு ஆணிடம் நட்பாகப் பேசினால்
இந்தச் சமூகம் கொடுக்கும்

கேவலமான பட்டங்களை...
ஆண் மகனே நீ அறிவாயா?
பேருந்து நெரிசலில்
உண்டாகும் கொடுமைகளை
ஆண் மகனே நீ அறிவாயா?

பெண்களை விடவா நீ
வலிகளையும் வேதனைகளையும்
அனுபவித்திருப்பாய்...?
உன் வேதனைகள் குறைவு
ஆனாலும் உன் குறைவான
வேதனைகளுக்கே குடிகாரனாக
அலைகின்றாய்....!

பெண்களைப் போன்ற
வேதனைகளை நீ
பட்டு விட்டால் உலகை
வெறுத்து ஒரே அடியாகப்
போய் விடுவாய்!

குடி... குடியை மட்டுமல்ல
உன் குலமதையே கெடுத்துக்
குட்டிச் சுவராக்கிவிடும்...!

வ.பாரதி
இளங்கலைத் தமிழ் மூன்றாமாண்டு

## நண்பன்

தன்னம்பிக்கை
வலுவிழந்து,
இளகிச் சரியும்
வேளையில்,
அனிச்சையாய்
தோள் தரும்
தோழமை
வாய்த்தல்
வரம்....!

செ.திவாகர்
இளம் அறிவியல் வேதியியல் முதலாமாண்டு

## இயற்கை

ஏரி குளம் வற்றிப்போச்சு
ஆறெல்லாம் வறண்டிருக்கு
எப்படி வாழ்ந்திடுவோம்
எதனை உண்டிடுவோம்
முப்போக விளைநிலங்கள்
பாளமாய் வெடித்த பின்னே
தூரலும் விழவில்லை
தொடர் மழையும் பெய்யவில்லை
என்ன பிழை செய்தோம்
ஏன் இந்த அவலநிலை

கொட்டட்டும் மாமழைதான்
குளிரட்டும் பூமியுந்தான்
உலகமுய்யப் பெய்திடுவாய்
உயிர் காக்கும் மழையே

மா.பிரபாகரன்
இளங்கலை ஆங்கிலம் முதலாமாண்டு

## அம்மா

அன்பு, அக்கறை
அரவணைப்பு, பாசம்
நேசம், தியாகம் என எல்லா
உணர்வுகளையும் ஒரே
இடத்தில் உணர்ந்தேன்
அவ்விடம்
அம்மா!!

வி.பரத் ராஜ்
இளங்கலை தமிழிலக்கியம் முதலாமாண்டு